1982 மார்ச் 18]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம்.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, இப்படி தூங்கும் வசதி கொண்ட எத்தனை பேருந்துகள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஒரு பேருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. இன்னொன்று தயாராகிக் கொண்டிருக்கிறது.

திரு. எம், சின்னசாமி : தலைவரவர்களே, அந்தப் பேருந்துகளை எந்த எந்த வழித்தடங்களில் விடுவதாக அரசு உத்தேசித்துள்ளது? அந்தப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தன்னுடைய யோசனைப்படி தயாரித்துள்ளதா? அல்லது வேறு மாநிலங்களில் இம்மாதிரியாக இருந்து, அதைப்பார்த்து தயார் செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இன்னும் எந்த எந்த வழித்தடங்களில் விடுவது என்று முடிவு செய்யப்படவில்லை. இது நம்முடைய சொந்த யோசனையில் உருவானது.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, தூங்கும் வசதி கொண்ட பேருந்துகளை இரயில் வசதி இல்லாத குமரி மாவட்டத்தில் விட்டு அந்த மக்களின் தேவையை நிறைவுசெய்த பெருமையை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இப்படிக் கேட்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆகவே இந்தக் கேள்விக்குப் பதில் தேவையில்லை.

அம்பத்தூரில் பேருந்து நிலையம் அமைத்தல்

*வினா எண். 545—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் வரை செல்லும் பேருந்துகள் அம்பத்தூரில் பேருந்து நிலைய வசதி இல்லாமல் சாலையிலேயே நிறுத்தப் படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிரந்தர பேருந்து நிலையம் அங்கு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்திடம் பேருந்து நிலையம் கட்ட திட்டமில்லை. ஆனால் அம்பத்தூர் நகரியம் பேருந்து நிலையம் கட்ட திட்டமிட்டு, அதற்குரிய நிலத்தை பல்லவன் போக்குவரத்துக் கழகத்துடன் கலந்து தேர்ந்தெடுக்க உள்ளது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, திருவள்ளூர் நெடுஞ்சாலையில் இந்த பேருந்துகள் எல்லாம் நிறுத்தி வைக்கப் படுவதால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறு ஏற்படுகிறது. அங்கே விபத்துகள்கூட அடிக்கடி நிகழ்கிற வாய்ப்பு இருக்கிறது. இப்போது அம்பத்தூர் நகரியம் பேருந்துகளை நிறுத்துவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிற இடத்திலே, 'பெர்மிஷன் டு என்டர் அப்பான் தி லேன்ட்' என்ற முறையிலே அவர்கள் அனுமதித்தால் அங்கே பேருந்துகளை நிறுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடத்தைப்பற்றி இன்று காலையில் நான் அதிகாரிகளை அழைத்துப் பேசினேன். நாம் இப்போது பேருந்துகளை நிறுத்தும் இடத்திலிருந்து அந்த இடம் சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆகவே, அங்கே பேருந்துகளைக் கொண்டு நிறுத்தினால் மக்களுக்கு வசதியாக இருக்குமா என்று பார்த்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்தாலும் இடம் தேவை என்றால் அந்த இடத்தை வாங்க தயாராக இருக்கிறோம்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, அம்பத்தூர் வரை செல்லுகின்ற அந்த பேருந்துகள் நிற்கிற இடம் அம்பத்தூர் நகரிய எல்லையிலே ஒரு மூலையில் இருக்குமானால், நகர் முழுவதும் பேருந்துகள் சுற்றிவர வாய்ப்பு இருக்கிறது. எனவே ஒரு கிலோமீட்டர் தள்ளி இருந்தாலும் பொதுமக்களுக்கு ஏற்புடையதாக இருப்பதால் உடனடியாக அந்த இடத்திலே பேருந்துகளை நிறுத்துவதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்த இடம் மக்களுக்கு வசதியாக இருக்கிற சூழ்நிலை இருந்தால் நிச்சயமாக அந்த இடத்தை எடுத்துக்கொள்ளவும், அங்கே பேருந்துகளை நிறுத்தவும் நாம் தயாராக இருக்கிறோம்.